உ

சிவமயம்.

பீபில்ஸ்பார்க்கு

வழிநடைச்சிந்து.

இவை,

வீ. இராஜுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

பீபில்ஸ்பார்க்கு

வழிநடைச்சிந்து.

காப்பு-பின்முடுகு வெண்பா.

அங்கத்தைப்பூம்பாவை யாக்கியருள்மயிலைச்
சங்கரன்மீதிற்சிந்துசாற்றவே துங்கமன்றுள்
நீடுகடையாடநட மாடபரனருளோர்
கோடுறுநற் குஞ்சரத்தன் கூறு.

சீர்மருவுஞ்சென்னைநகர் செங்கான்கடைக்கடுத்த
முல்லாவீதிதனில் மொய்குழலைவீற்றிருக்கும்
காரிழையேநாமிருவர் கைகோர்த்துவிப்போது,
மயிலைநகருக்கு மாதரசேபோகலாம்
அறுபத்துமூவரையும் அங்கம்பூம்பாவையையும்
கபாலீசர்வருகிற காட்சியையுங்காணலாம்
அல்லலறுத்த அடியார்கள்பாதத்தூள்
பட்டாலும்பாவங்கள் பரந்தோடும்பாராய்
குத்தினிசேலையுங் குணமானபஞ்சவர்ன
பட்டுரவிக்கையும் பத்தரைமாற்றுத்தங்கம்
பசும்பொன்னால்பூஷணமும் போட்டுஅலங்கரித்து
புறப்பட்டுவருவாயே தங்கமே
பொழுதுமிகவாகுதப்போ க
கடுகநடந்துவாராய் கட்டழகிமுல்லா
சாயபுவீதியிது சட்டமுடன்பாராய்
பக்தர்கள்தான்தொழும் பரமபதநாதர்
வைகுந்தசேவை தருமஸ்ரீரங்க

நாதர்சந்நிதி நாயகியேகேளாய்
அருணாசலேசுரர் ஆலயத்தைப்பாராய்
தர்மராஜாகோவிலிது தண்ணிதொட்டிப்பாராய்
ஆனைகெவுனியிது அடுத்தாப்போல்தோட்டம்
விக்டோரியாள்தோட்டமிதின் விசித்திரங்கேளாய்
அந்தமானகிராதி அழகானகேட்டு
பாராயிருக்கிறார் பாரடிபெண்மயிலே
மண்ணாலேமேடிட்டு மரத்தாலேபாளங்கட்டி
பேராலபெருத்த புழலேரிதண்ணீரை
வாட்டர்பைப்ஸ்வைத்து வழங்குகிறார்பாராய்
வாலிபப்பெண்கள் வரிசைவரிசையாக
தண்ணீரைமொண்டு தலையிலேதானெடுத்து
இசையவழிநடந்து யேகிறார்பாராய்
ஆண்கரடிபெண்கரடி அதற்கொருகொட்டாயாம்
பெரும்புலிசிறுத்தை பேர்போனசிங்கம்
கல்லானையொன்று கனமுடன்வாழுதற்கு
சுற்றிலுந்தகட்டினை சொகுசாய்மறைத்துவிட்டு
ஆளொருவர்க்குமே அரையணாவாங்குகின்ற
இன்ஸ்பெக்டரிவர்தான் ஓதிரிலேபாராய்
பலகைவாராவதி பாங்கானமேடு
சுற்றிலுந்தண்ணீரில் சொகுசாகபோட்டுவிட்டு
காலணாவாங்குவோர் கட்டழகிகேளாய்
மலையிலேவாழும் மலைநாகம்பாராய்
பார்த்தால்பயங்கொடுக்கும் பட்சியிதுகேளாய்
பிடிங்கிதின்னும்பட்சியென்று பேசுகிறார்கேளாய்

பிள்ளைகள்விளையாட பெருமையானவுஞ்சலிது
நெருப்புதின்னும்பட்சியிதின் நேர்மையைபாராய்
மக்காமதீனவில் மாறுபேருண்டிதற்கு
தீக்குறுவியென்று தீர்ப்புசெய்திருக்கிறார்
இதற்கொருகொட்டாயும் இருக்குதுபாராய்
பட்சிகளிருக்கிறதை பாராய்நீபெண்மயிலே
கடல்காக்கைகள்ளிகாக்கை கண்சிவந்தநாரைகளும்
வக்காவுங்கொக்காவும் வருமறிக்கும்வலியனும்
பாலக்குருவியுடன் பார்ப்பாரமைனவும்
நீர்கோழிகாட்டுக்கோழி நிகரானகானங்கோழி
காடைகள்கவுதாரி கல்பொறுக்கிகிளுவைகளும்
மாடப்புராக்களுடன் மணிப்புறுதவிட்டுப்புறு
தூரத்தில்கூடுகட்டும் தூக்கணங்குருவிகளும்
மூக்குகள்நீண்டிருக்கும் மீன்குத்திபட்சிகளும்
கொண்டலாத்திடைகள் குணமான அடைக்கலான்
லால்சிட்டுலங்கர்சிட்டு நலமானதேன்சிட்டு
புல்புல்குருவிகளும் புகழான ஆள்காட்டி
நாமக்குருவியுடன் நாராயணபட்சிகளும்
மயில்களும்குயில்களும் மருவிவிளையாடுதலும்
சப்ஜாகயரா கலிங்காப்படங்கா
சீனிக்கருணை சாதாவிடைகளுடன்
ஆட்டப்புறாக்கள் அணியணியாய்நிற்குது
பச்சைக்கிளியுடன் பஞ்சவர்னக்கிளிகளும்
கொச்சிக்கிளிகளுடன் கொளும்புக்கிளிகளும்
வெள்ளைக்கிளிகளுடன் ரங்கோன்கிளிகளும்

என்னென்னபட்சியென்று எடுத்துரைப்பேன்கேளா
சூட்சமாய்சொன்னேனென்பார் தங்கமே
சொல்லமுடியாதடி உ
இன்னம்வினோதங்களை எடுத்துரைப்பேன்கேளாய்
கழுதைக்குரத்தியுடன் காட்டுப்பெருச்சாளி
ஆந்தையுங்கோட்டானும் அழகானவல்லூரும்
குள்ளநரிகளுடன் குழநரிதேவாங்கு
ஆமையும்பச்சைஓணான் அழகானமுள்ளம்பன்றி
சிவிங்கிமுசலுடன் சீமையணிப்பிள்ளை
பயிரியடப்பானும் பாங்கானகாட்டுப்பூனை
புனுகுப்பூனையுடன் புகழானகீரிப்பிள்ளை
காட்டுப்பசுக்களுடன் கடம்பைகள்மேயுதுபார்
புள்ளிமானகளுடன் புகழானகிளைமான்கள்
வெள்ளைமான்களிது விளையாடிமேயுதுபார்
குரங்குகளெல்லாம் கூட்டமாயிருந்துதானல்
சண்டைகள்செய்யுதென்று சங்கிலியால்தான்பூட்டி
ஒவ்வொருகூண்டுகளில் விட்டுயிருக்குதுபார்
மந்தியென்றுசொல்லும் மலையாளக்குரங்குகளும்
கல்லாலடிக்கிற ரங்கோன்குரங்குகளும்
கொண்டமுசலகமுடன் லண்டன்குரங்குகளும்
காட்டுமனிதருடன் கருத்தகுரங்குகளும்
கடலைகொடுத்தால் கையாலசலாஞ்செய்யும்
நாட்டுகுரங்குகளை நலமுடன்பாராய்
பாரியதுரைகளுக்கு பாண்மேடைபாராய்
செவ்வாய்சனியிலும் சாயங்காலவேளைதனில்

இங்கிலீஷ்வாத்தியம் இன்பமுடன்கேட்கலாம்
மகாராஜாராஜஸ்திரீ அல்பிரட்துரையவா
வந்தமொருநாளையிலே வைத்ததொருபூஞ்செடியா
கெளித்தயானையிதோ கிளிமொழியேமேயுதுபார்
அதுதான்பெண்மயிலே அழகானஓவர்சீர்
வல்லீஸ்துரையவர்கள் இருக்கிறபங்களா
மச்சங்கள்மண்டூகம் முதலைகள்வாழுதற்கு
சுற்றிலும்கம்பியால் சொகுசாய்வலைபின்னி
நடுவிலேபிலவர்ஸ்டய் நாயகியேநீபாராய்
பில்லறுக்கும்வண்டியிதன் பெருமையைப்பாராய்
அறுத்ததொருபில்லுகளை அணிபணியாய்போர்போ
கம்சேரிஆர்ட்டு கோவேறுகழுதைகட்கு [டு
நிறுத்துஅனுப்புகிற திராசுயிதுபாராய்
காடியிதில்வாழ கட்டினார்கிணறுபோல்
நாலுமூலைகேட்டு நடுவேசுடுகாடு
பார்த்தாயோபெண்மயிலே—தங்கமே
பட்டணத்தோட்டம் பாராய்
கள்ளைக்குடித்துவிட்டு கன்னங்களவுகளும்
கண்டபடிசண்டைசெய்து பண்டையடிப்பவர்கள்
துண்டகாதனஞ்செய்யும் துன்மார்க்கரிருக்கிற
மண்ஜெயிலிதுதான் மாங்குயிலேபாராய்
கைதிகள்செய்கிற பயிர்களைநீபாராய், கொலைசெய்த
மாந்தருக்கு நாட்டினார் தூக்குமரம், நடமுமநேயிது
தான்நாயகமேநீபாரு, சிந்தாத்திரிப்பேட்டை சிலம்
பானபாளமடி, கடையுங்கடைத்தெருவு கட்டழகிபா

ராய், பேரால்பெருத்து பெருமையுடன்வாழுகின்ற
முருகப்பமுதலியார் முன்னுளில்கட்டின
சித்திரபங்களா சிறப்பதனைப்பாராய்
சாமிநாயகன்ரோட்டை சட்டமுடன்கடந்தோம்
கிளாஸ்காரன் தண்ணீர்பந்தல் கிளிமொழியேயிது
டைலர்தச்சவாடியுடன் சதுரானஆஸ்டன்துரை
ஷாப்புகளிருக்கிற சட்டத்தைப்பாராய்
பாட்டர்ஸ்தோட்டம் பக்கத்திலேகிளப்பவுசு
எந்தவெளிடாணு மாதாகோவில்பாராய்
எதிரிலேயிஸ்கூல் இதுதான்ராயப்பேட்டை
சீர்பெற்றுவாழும் செல்லப்பன்மிட்டாய்கடை
பூரியலுவாவும் புகழானநொக்கலும்
லட்டுஜிலேப்பியுடன நலமான அதிரசம்
பால்கோவாஇமிர்த்தியும் பாங்கானபகோடாவும்
வாங்கித்தறுகிரேன் வாழ்மயிலேகேளாய்
தாண்டவராயன் தண்ணீர்ப்பந்தலிது
உண்டுஇளப்பாறி ஒறுமித்துப்போகலாம்
பிரசன்னவினுபகர் ச் நிதியிதுதான்
அம்பட்டன்வாராவதி யதனையும்நாம்நடப்போம்
அப்பர்மடமிது அன்புடனேசேவிப்பாய்
குடஞ்சட்டிசெய்யும் குசப்பேட்டைபாராய்
மயிலைநகர்வந்தோம் வாழ்மயிலேகேளாய்
தீராவினைதீர்க்கும் திறுககுளத்தைபாராய்
கபாலீசர்வருகிறுர்பார் தமகமேகண்டுதரிசிப்பாய்
ஆரணங்கேயிவர்தான் அறுபத்துமூன்று

அடியார்கள்பாராய் அமர்நீதிஏனாதி
அரிவாட்டா அப்பூதி இசைஞானிநாயனார்
இளையான்குடிமாரர் இபங்கழியதிபத்தி
இயற்பகைசாக்கியறும்உக்காபசுபதிஉத்தமர்டுறுதொ
ஐயடிகள்காடவர் அழகானசுழற்சங்கம் (ண்டர்
கர்கலியர்கலிக்காமர் கணம்புல்லநாயனாரும்
குங்கிலியக்கலயர் குலசிங்கர்காரியறும்
கோட்புலிகூற்றுவரும் கோச்செங்கட்சோழரும்
சடையர்சிறப்புலியா சண்பேசர்சத்தியரும்
சுந்தரமூர்த்தியுடன் சொகுசானதண்டியறும்
நமிர்ந்தநெடுமாரர் நரசிங்கமுனையரையர்
சேரமான்நேசன் செறுத்துணைநாயனாறும்
திருநாவுக்கரசர் திருககுறிப்புத்தொண்டரும்
திருமூலநீலநக்கர் திருநாளைப்போவாறும்
புகழ்சோழநீலகண்டர் புகழ்த்துணைசம்பந்தர்
மாணிக்கர்பூசலார மங்கையர்க்கரசியறும்
முருகர்முனையாடுவார் மூர்க்கரெரிபத்தர்
மெய்ப்பொருள்வார்யிலார்மெய்க்கண்டர்விரன்மிண்டர்
சிவனடியார்களிவர் செல்வவிநாயகரும்
வள்ளிதெய்வானையுடன் வடிவேலர்வருகிறார்
அங்கம்பூம்பாவையையும் அழகுகபாலீசரையும்
அம்மன்கற்பகவல்லியம்மையும்
கண்டுநாம்பணிவோம் தங்கமே
காட்சிதருவாரே.

வழிநடைச்சிந்து முற்றிற்று.